# மாதவரம் – சோழிங்கநல்லூர் மெட்ரோ: ரூ. 4,770 கோடி வழங்க ஒப்பந்தம்

– நமது நிருபர் –

சென்னை மெட்ரோ ரயில், இரண்டாம் கட்ட விரிவாக்க திட்டத்தை செயல்படுத்த, ஜப்பான் நிறுவனம், 20 ஆயிரத்து, 196 கோடி ரூபாய், கடனுதவி வழங்க முன் வந்துள்ளது.

முதல் கட்டமாக, 4,770 கோடி ரூபாய் வழங்க, நேற்று டில்லியில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின், இரண்டாவது கட்டமாக, மாதவரம் – சோழிங்கநல்லூர் வரை, 35.67 கி.மீ., துாரத்திற்கு ஒரு வழித்தடத்திலும், மாதவரத்தில் இருந்து கோயம்பேடு பேருந்து நிலையம் வரை, 16.34 கி.மீ., துாரத்திற்கு, மற்றொரு வழித்தடத்திலும், மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.



இந்த திட்டத்திற்கு, 40 ஆயிரத்து, 941 கோடி ரூபாய் செலவாகும் என, கணக்கிடப்பட்டுள்ளது.

இதை செயல்படுத்த, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையான, 'ஜைகா' நிறுவனம், 20 ஆயிரத்து, 196 கோடி ரூபாய், கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது.

முதல் கட்டமாக, 4,770 ரூபாய் கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தம், நேற்று டில்லியில் கையெழுத்தானது.

இதில், மத்திய பொருளாதார விவகாரங்கள் துறை, கூடுதல் செயலர் மொகபத்ரா, ஜைகா நிறுவன தலைமை நிர்வாகி, கட்சூவோ மட்சுமோட்டா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில், இந்தியாவிற்கான ஜப்பான் துாதர், கென்ஜி கிராமட்சு, தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலர், சோமநாதன், சென்னை மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குனர், பங்கஜ்குமார் பன்சால் ஆகியோர் உடனிருந்தனர்.

இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது, சென்னையில் பல்வேறு பகுதி மக்கள், மெட்ரோ ரயில் சேவையை பெறுவர்.